DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.560/2023

Deposition of Witness : PW1

| Name | செல்வராஜ் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | வேலாயுதம் | Village | |
| Age | 63 | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **23.04.2025.** | | | |

(Accused absent, U/s.317 Cr.PC petition filed and allowed)

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் M.Sc.,M.Ed., படித்துள்ளேன். நான் பேர்பெரியான்குப்பத்தில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் முதுகலை ஆசிரியராக பணிபுரிந்தேன். நான் 30,05,2023 அன்று பணி ஓய்வு பெற்றேன். நான் கடைசியாக பெற்ற மாத ஊதியம் ரூ.90,000 ஆகும். எனக்கு மாதாந்திர ஓய்வுதியம் கிடையாது. நான் பெற்ற வருமானத்திற்கான வருமான வரி தாக்கல் செய்துள்ளேனா என்றால் சுமார் 50,000 வீதம் வருடத்திற்கு வருமான வரி தாக்கல் செய்துள்ளேன். எனது சொத்து மதிப்பு ரூபாய் 2 கோடி இருக்கும். மேற்படி சொத்து நானும் என் மனைவியும் சம்பாதித்த சுய சம்பாத்திய சொத்துக்களாகும். எனது பரம்பரை சொத்து சுமார் 31 சென்ட் இருக்கும். அதன் மொத்த மதிப்பு சுமார் 15 இலட்சம் இருக்கும். எனது தம்பி பத்தாவது வரை படித்துள்ளார். நான் எனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் குடும்பமாக உள்ளேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் எனது தம்பி வீட்டிற்கும் இடையே சுமார் 3 வீடுகள் இருக்கும். எனது தம்பி முந்திரிக்கொட்டை வியாபாரம் முதலில் செய்து கொண்டிருந்தார். தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என தெரியாது. நானும் எனது தம்பியும் சேர்ந்து எவ்வளவு நாள் முந்திரி வியாபாரம் செய்தோம் என்றால் நாங்கள் இருவரும் சேர்ந்து ஒன்றாக வியாபாரம் செய்தது கிடையாது.

2. எனது ஊரில் அரிசி ஆலை எங்கு உள்ளது என்றால் எனது சொந்தஊரான கீழக்குப்பத்தில் அரிசி ஆலை எதுவும் இல்லை. நான் தற்போது எங்கு வசிக்கிறேன் என்றால் நடுக்குப்பத்தில் வசிக்கிறேன். அங்கு பிரேமலதா அரிசி ஆலை உள்ளதா என்றால் தற்போது எனக்கு தெரியாது. ஆனால் முன்பு இருந்தது. நான் நடுக்குப்பத்திலே தான் வசிக்கிறேன் என்றாலும் கீழக்குப்பத்தில் இல்லை என்றாலும் சரியல்ல நான் தற்போது நடுக்குப்பத்தில் வசிக்கிறேன் ஆனால் எனது சொந்த ஊரான கீழக்குப்பத்தில் எனக்கு வீடு

உள்ளது. நடுக்குப்பத்தில் உள்ள பிரேமலதா அரிசி ஆலை யாருடையது என்றால் எனது தம்பி உடையது. அது எவ்வளவு நாட்களாக இயங்கி வருகிறது என்றால் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகிறது. மேற்படி அரிசி ஆலை 2018 ஆம் ஆண்டில் முடப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி அரிசி ஆலையின் கணக்கு வழக்குகளை நிர்வகித்தது யார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சிவசங்கரன் தான் பார்த்து வந்தார்.

3. எனது தம்பி படிக்கவில்லை என்பதனால் அவருக்கு கணக்கு வழக்குகள் பார்க்க தெரியாது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அவர் பத்தாம் வகுப்பு படித்தவர் எனவே அவருக்கு கணக்கு வழக்குகள் நன்கு பார்க்க தெரியும். 2018 ஆம் ஆண்டிற்கு பின்னர் எனது தம்பி பிரேமலதா அரிசி ஆலையை முடிவிட்டு, சிவா நவீன அரிசி ஆலை என்ற பெயரில் அரிசி ஆலையினை நடத்தி வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தம்பிக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் எவ்வளவு நாளாக இருந்து வருகிறது என்றால் 2023 ஆம் ஆண்டு முதலாக பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தேன். 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் எனக்கும் எனது தம்பிக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் அண்ணன் தம்பி என்ற முறையில் சிறிய அளவில் இருந்து வந்தது. 2023 ஆம் ஆண்டிற்கு முன்னர் எனக்கும் எனது தம்பிக்கும் கொடுக்கல் வாங்கல் எதுவும் இருந்ததில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே அவ்வாறு கொடுக்கல் வாங்கல் இருந்திருந்தால் மேற்படி பிரேமலதாஎன்ற பெயரில் இருந்த அரிசி ஆலை  சிவா நவீன அரிசி ஆலை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. எனது மனைவி காசியம்மாள் 22.06.2023 அன்று சிவசங்கரன் மற்றும் அஜீத் ஆகிய இருவரும் எனது மனைவியை அடித்து விட்டதாக முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளாரா என்றால் எனது மனைவி 10.06.2023 அன்று தான் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். 22.06,2023 அன்று அதற்கான முதல் தகவல் அறிக்கை மேற்படி போலிசாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரச்சனை நடப்பதற்கு முன்பிருந்தே எனக்கும் எனது தம்பி குடும்த்திற்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரியல்ல. 7.06.2023 அன்று எனது வீட்டில் வைத்து காலை 10 மணியளவில் எனது  தம்பிக்கு எனது மனைவி பள்ளிக்கு சென்றிருந்த சமயத்தில் எனது மனைவிக்கு சொல்லாமல்  நான் ரூ25,00000 கொடுத்தது தொடர்பாக தான் எங்கள் இரு குடும்பத்திற்கும் பிரச்சனை ஏற்பட்டது. மேற்படி பணத்தினை எனது தம்பி 6.06.2023 அன்று அவருக்கு ஒரு பெரிய பிரச்சனை இருப்பதாக சொல்லி அதனை பெற்றுக் கொண்டதில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் திருப்பி தருவதாக சொல்லி என்னிடம் நேரில் மெயின் ரோட்டில் நான் வண்டியில் வரும்போது அவரது நிலத்திற்கு அருகில் நின்று கொண்டு

கேட்டார். அப்போது எனக்கு எனது மகள் திருமணம் மற்றும் நிலம் வாங்குவது தொடர்பாகவும் பல பண பிரச்சனைகள் இருப்பதனால் ஒரு மாதத்திற்குள் என்னிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் கடனை என்னிடம் திருப்பி தந்து விடுவதாக இருந்தால் தருகிறேன் என்று கூறினேன். நான் எனது தம்பிக்கு கொடுத்த பணம் பற்றி எனது குடும்பத்தில் யாருக்காவது தெரியுமா என்றால் யாருக்கும் தெரியாமல் தான் பணம் கொடுத்தேன். ஆனால் கொடுத்த அன்றே எனது மனைவி வந்தவுடன் அவரிடம் சொல்லிவிட்டேன்.

4. அதன் பின்னர் 10.06.2023 அன்று எனது தம்பிக்கும் எனது மனைவிக்கும் ஏற்பட்ட பிரச்சனை தொடர்ந்து எனது குடும்பத்திற்கும் மற்றவர்களுக்கும் தெரிந்து விட்டது. பொதுவாக வீட்டில் நான் எவ்வளவு பணம் கையில் வைத்திருப்பேன் என்றால் 40-50 இலட்சம் கூட வைத்திருப்பேன். எனக்கு கடன் எவ்வளவு உள்ளது என்றால் எனக்கு கடன் எதுவும் இல்லை நான் எனது தம்பிக்கு வாங்கிக் கொடுத்த கடன் 1 கோடி மட்டும் தான் உள்ளது. நான் எனது தம்பிக்கு கொடுத்த மேற்படி ரூ25,00000 ன் நாணய வாரி என்னவென்றால் ரூ.500 x 50 கட்டுகள். நான் எனது தம்பிக்கு ரூ1 கோடி கடனாக கொடுத்துள்ளேனா என்றால் எனது தம்பிக்கு நான் 25,00000 கொடுப்பதற்காக நான் வெளியில் வாங்கிய பணத்திற்கான வட்டிகள் சேர்ந்து தற்போது ரூபாய் 1 கோடி கடனாக உள்ளது. நான் உண்மையிலேயே எனது தம்பிக்கு பணமே கொடுக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் என் தம்பிக்கு பணம் கொடுக்கும்போது பிணையாக ஏதேனும் நான் கேட்டு பெற்றுக்கொண்டேனா என்றால் ரூ25,00000 க்கான காசோலையை பெற்றுக்கொண்டேன். மேற்படி காசோலையை பெற்றுக் கொண்ட விவரத்தை எனது மனைவியிடம் நான் கூறினேனா என்றால் கூறினேன். என்னிடம் காட்டப்படும் காசோலை தான் எனது தம்பி மேற்படி கடனுக்காக எனக்கு கொடுத்த காசோலையாகும். எனக்கு பொதுவாக காசோலையில் உள்ள அம்சங்கள் குறித்து தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். காசோலையானது தனிநபர் காசோலையா அல்லது நிறுவண காசோலையா என்ற விவரங்கள் காசோலையை பார்த்த மாத்திரத்தில் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு சரியாக தெரியாது. நிறுவண காசோலை பற்றி எனக்கு ஏதாவது தெரியுமா என்றால் அவ்வாறான காசோலைகளில் அதன் உரிமையாளர் கையெழுத்து இட்டு கொடுப்பார் என்ற விவரம் எனக்கு தெரியும். எனது தம்பியின் அரிசி ஆலை கணக்கு வழக்குகளை நான் தான் பராமரித்தேன் என்ற வகையில் அதன் காசோலைகள் என்னிடம் தான் இருந்தது என்றாலும், அதனை நான் தவறாக பயன்படுத்திக் கொண்டு இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தம்பி எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் மேற்படி காசோலையில் பிரேமலதா ரைஸ் மில் என்று முத்திரை இடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி காசோலை 2010 ஆம் ஆண்டின் உடையது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனை தற்போது பார்த்தால் சொல்லுவேன். மேற்படி காசோலையில் எந்த வருடம் உள்ளது என்று நான் பார்க்கவில்லை. எனது தம்பி கையெழுத்திட்டு காசோலை கொடுத்தார். அதன் அடிப்படையில் நான் பணம் கொடுத்தேன். மேற்படி காசோலையில் உள்ள விவரங்களை யார் எழுதினார் என்றால் நான் தான் எழுதினேன். ஏனெனில் எனது தம்பிக்கு ஆங்கிலத்தில் எழுத தெரியாது என்பதனால் எழுத்தால் ஆங்கிலத்தில் ரூ.25,00000 என்று நான் எழுதினேன். அதில் எண்ணால் ரூ.25,00000/- என்று எழுதி இருந்தது எனது தம்பிக்கு படிக்க தெரியும். அதிலுள்ள சீல் எப்பொழுது போடப்பட்டது என்றால் என் தம்பி என்னிடம் பணம் வாங்கும்போது போடப்பட்டது. உண்மையிலேயே நான் எனது தம்பிக்கு பணம் கொடுத்திருந்தால் தற்போது இயக்கத்தில் இல்லாத பிரேமலதா அரிசி ஆலையின் முத்திரையை எனது தம்பி இடும்போது நான் பார்த்து அது பற்றி கேட்டிருப்பேன் என்றாலும் நான் எனது தம்பிக்கு பணமே கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது தம்பி பெயரில் தாக்கல் செய்துள்ள வழக்கே தவறானது என்றாலும் மேற்படி பிரேமலதா அரிசி ஆலையின் பெயரில் தான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. நான் மேற்படி பிரேமலதா அரிசி ஆலையின் உரிமையாளரான எனது தம்பி சிவசங்கரன் மீது தான் வழக்கு தாக்கல் செய்துள்ேளன். மேற்படி விவரத்தினை எனது மனுவிலும் தாவாவிலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நானும் எனது தம்பியும் ஒன்றாக முந்திரி வியாபாரம் செய்கிறோம் என்றாலும் என் தொழிலில் ஏற்பட்ட நட்டத்தினை சரிசெய்வதற்காக எனது தம்பி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனக்கு ஏகப்பட்ட கடன் உள்ளது என்றாலும்,எனது சொத்துகள் அடமானத்தில் உள்ளது என்றாலும் அதனால் எனது தம்பிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றாலும் நானும் எனது மனைவியும் அரசு ஊழியர்கள் என்பதனால் எனக்கு வசதி உள்ளது. எனது தம்பியிடம் நான் கடன் கொடுக்கும்போதே மேற்படி காசோலையினை ஒரு மாதம் கழித்து வங்கியில் செலுத்தி பணம் எடுத்துக்கொள்ளுமாறு அவர் கூறியதன் அடிப்படையில் நான் வங்கியில் அக்காசோலையினை வசூலுக்காக செலுத்தினேன். செலுத்துவதற்கு இடையில் அவரிடம் தெரிவித்தேனா என்றால் இல்லை. எனது தம்பியின் அரிசி சஆலைக்குள் நான் எப்போதாவது சென்று வந்துள்ளேனா என்றால் இல்லை. எனது தம்பி முன்பு அரிசி ஆலை வைத்திருந்த இடத்தில் தற்போது முந்திரி வியாபாரம் செய்து வரும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தம்பி எனக்கு காசோலையே கொடுக்கவில்லை என்றாலும் இவ்வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.